பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 வைகாசி 15 வியாழக்கிழமை (28-05-1992) UTHAYAN — A Lively National Tamil Daily; கதிர் 132

நல்லூர் [illegible] நூலகம்

# வெளிநாட்டு நிதி உதவியில் 60 வீதம் ராணுவச் செலவுக்கு!

## தினசரி நாலரைக் கோடி ரூபா விரயம்

மணிலா, மே 28

இலங்கையின் இராணுவச் செலவு நாள் தோறும் அதிகரித்து வருகிறது. யுத்தத்துக்காக நாள் ஒன்றுக்கு நாலரைக் கோடி ரூபாவை அரசு விரயமாக்குகிறது.

1990 ஆம் ஆண்டில் மட்டும், இலங்கை வெளிநாடுகளில் இருந்து பெற்ற மொத்த நிதி உதவியில் அறுபது சதவீதத்துக்கு மேலான தொகை இராணுவச் செலவுக்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது!

இந்த விவரங்களை வெரித்தாஸ் வானொலி வெளியிட்டிருக்கிறது. ''இன்ரநாஷனல் டிவென்ஸ் றிவியூ'' மற்றும் பத்திரிகைகள், என்சைக்கிளோப்பீடியா ஆகியவற்றில் இருந்து திரட்டிய தரவுகளை அடிப்படையாக வைத்து வெரித்தாஸ் இந்தப் புள்ளி விவரங்களை வெளியிட்டிருக்கிறது.

அந்தப் புள்ளி விவரங்களில்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## 8 'அவுட்போர்ட்' என்ஜின்கள் சிலாபத்தில் அபகரிப்பு

கொழும்பு, மே 28

சிலாபம், குளியாப்பிட்டி பொலீஸ் பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இப்பகுதியில் உள்ள பத்தலன் குண்டுவ கிராமத்தில் எட்டு அவுட்போர்ட் என்ஜின்களை இனந்தெரியாதவர்கள் பறித்துச் சென்றதாகக் கூறப்படுகிறது. அதனை அடுத்தே பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புத்தளம் மாவட்டக் கரையோரப் பகுதியிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன என்றும் 'த ஐலண்ட்' செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-எ]

## ஆனையிறவில் ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், மே 28

ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து நேற்று முன்தினம் இரவு தட்டுவன் கொட்டிப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

கடந்த ஒருவார காலமாக தினசரி ஷெல் தாக்குதல் இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. [ஒ-15]

## யாழ். ஊரடங்கு நீக்கம்

கொழும்பு, மே 28

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்றுக் காலை 6 மணிக்கு அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட ஊரடங்குச் சட்டம் நேற்று மாலை 6 மணியுடன் நீக்கப்பட்டுவிட்டதாக கூட்டுப் படைகள் தலைமை அலுவலகம் அறிவித்தது [உ-எ]

## இத்தாலியில் 7 தமிழர் கைது

ரோம், மே 28

40 லட்சம் டொலர் பெறுமதியான போதைவஸ்துக்களைப் பதுக்கிக் கொண்டு வந்த ஏழு இலங்கைத் தமிழர்கள் இத்தாலியில் பிடிபட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது. [ஒ-த]

## வாழைச்சேனையில் தமிழ்க் குடும்பங்கள் பல பலவந்தமாகக் குடியேற்றம்

பொலன்னறுவ முத்துகல் கிராமப் படுகொலைச் சம்பங்களை அடுத்து அங்கிருந்து வெளியேறிய தமிழ்க் குடும்பங்கள் படையினரால் வாழைச்சேனை அகதி முகாமில் பலவந்தமாகக்குடியமர்த்தப் பட்டிருக்கின்றன.

இராணுவத்தினதும், முஸ்லிம்களினதும் அச்சுறுத்தல்கள் நிறைந்த பகுதியில் அமைந்திருக்கும் வாழைச்சேனை அகதி முகாமில் தங்குவதற்கு இத் தமிழ்க்குடும்பங்கள் முன்னர் மறுப்புத் தெரிவித்திருந்தன. ஆனால் தற்போது அவர்கள் பலவந்தமாக அங்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

இவர்கள் கடந்த மாதம் இடம்பெற்ற படுகொலைச் சம்பவங்களை அடுத்து முதுகல கிராமத்திலிருந்து அகதிகளாக வெளியேறியவர்களாவர். [ஒ-5]

## நடுக் கடலில் படகு மூழ்கி தத்தளித்த மீனவர்கள்!

### பாலைதீவுப் பகுதியில் சம்பவம்

பாலைதீவுக் கடலில் நேற்று முன்தினம் இரவு வீசிய கடும் காற்றினால் குருநகர் மீனவர்களின் படகு ஒன்று கவிழ்ந்து மூழ்கியது.

அதில் தொழிலுக்குச் சென்றிருந்த குருநகர் மீனவர்கள் மூவரும் நடுக்கடலில் சுமார் 30 நிமிட நேரம் தத்தளித்து பரிதவித்துப் போயினர்.

அதிஷ்டவசமாக மற்றொரு படகில் சென்றவர்களால் அவர்கள் மூவரும் காப்பாற்றப்பட்டனர்.

குருநகரைச் சேர்ந்த இன்னையா இராமு (45 வயது), எஸ். இரத்தினம் (40 வயது), கிங்கொங் (38 வயது) ஆகியோரே தப்பி வந்த அந்த மூவரும் ஆவர். (ஒ-15)

## உடுகம்பொல வந்தார்! சகோதரர் மரணச்சடங்குக்கு

கொழும்பு, மே 28

அரசியல் சர்ச்சைக்குள்ளானவரும் தற்போது தலைமறைவாக இருப்பதாகக் கூறப்படுபவருமான முன்னாள் பிரதிப் பொலீஸ் மா அதிபர் திரு. பிரேமதாஸா உடுகம்பொல கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை 3-30 மணியளவில் அவரது சகோதரரின் மரணச்சடங்கில் கலந்து கொண்டாராம்.

கொழும்புத் தமிழ்ப் பத்திரிகை ஒன்று இவ்வாறு செய்தி வெளியிட்டுள்ளது.

பொலீஸாரால் தேடப்பட்டு வரும் உடுகம்பொல அவர்களை ஏமாற்றிவிட்டு, அவரது சகோதரரும் காலி, மோதல பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான மறைந்த முனிதாஸா உடுகம்பொலவுக்கு அவரது வீட்டிற்குச் சென்று சில நிமிட நேரம் அஞ்சலி செலுத்தி விட்டுச் சென்றார் என்றும் —

அவருடன் அவரது மெய்க்காப்பாளர்கள் 6 பேரும் கூடச் சென்றிருந்தனர் என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-த)

## தெரிவுக்குழு பகிஷ்கரிப்பு; சு. க. இன்று கூடி ஆராயும்

கொழும்பு, மே 28

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவைத் தொடர்ந்து பகிஷ்கரிப்பதா? பகிஷ்கரிப்பைக் கைவிடுவதா? என்பது குறித்து ஆராய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு இன்று வியாழக்கிழமை கூடவிருக்கிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பகிஷ்கரிப்பைக் கைவிடுமாறு தமிழ்க் கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

இது குறித்துப் பேச தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. குமார் பொன்னம்பலத்தை அனுரா பண்டாரநாயக்கா இன்று சந்திக்கவிருக்கிறார்.

இதேசமயம் —

நாடாளுமன்றத் தெரிவு குழுவிலிருந்து சுதந்திரக் கட்சி

[6 ஆம் பக்கம் பார்க்க]

# சீனச்சகடை விமானத்தின் சக்கரங்கள் திடீரென நடுவானில் கழன்று விழுந்தன!

## இரத்மலானையில் சம்பவம்

கொழும்பு, மே 28

இரத்மலானையில் உள்ள இலங்கை விமானப் படைத்தளப்பகுதியில் பரீட்சாத்தமாக பறந்துகொண்டிருந்த— சீனத் தயாரிப்பான—வை-12 ரக (சீனச் சகடை) விமானம் ஒன்றிலிருந்து அதன் இடது பக்கச் சக்கரங்கள் கழன்று விழுந்தன. இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை நண்பகல் இடம்பெற்றது.

பறந்து கொண்டிருந்த அவ் விமானத்தின் விமானிகளுக்கு [பைலட்களுக்கு] இந்த விஷயத்தை விமானப் படையின் செயற்பாட்டு அலுவலகம் உடனடியாகத் [தெரிவித்தது. அத்துடன் விமானத்தில் உள்ள எரிபொருள் முடிவடையும் வரை]தொடர்ந்து பறந்து கொண்டிருக்கும் படி அந்த விமானத்தின் பைலட்களுக்கு மேலும் உத்தரவிடப்பட்டது.

அதன் படி விமானத்தை 3 மணித்தியாலங்களாக விமானிகள் ஓட்டினர். பின்னர் பிற்பகல் 3 மணியளவில் விமானம் இரண்டு சக்கரங்களுடன் இரத்மலான விமான நிலையத்தில் தரை இறக்கப்பட்டது. அச்சமயம் விமான நிலையத்தில் தீயணைப்புப் படைப்பிரிவுகள் எதற்கும் தயாரான நிலையில் வைக்கப்பட்டிருந்தன.

விமானத்தின் மூன்று பக்கச் சக்கரங்களில் இடது பக்கச் சக்கரங்கள் முற்றாகக் கழன்று விழுந்து விட்டதால் வலது பக்கச் சக்கரங்களையும் முன் பக்க [மூக்குப் பக்க] சக்கரங்களையும் மட்டும் பாவித்து விமானத்தை பைலட்டுகள் பாதுகாப்பாகத்

[6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினை விஸ்வரூபம் எடுக்க ஐ. தே. கவினர் காரணம் அல்லர்!

## ஆளும் கட்சி எம். பி. இப்படிக் கூறுகிறார்

கொழும்பு, மே 27

இனப்பிரச்சினை விஸ்வரூபம் எடுக்க நாம் காரணமாக இருக்கவில்லை.

அவசரகால சட்ட நீடிப்பு விவாதத்தில் பேசுகையில் ஐ. தே. க. எம். பியான ஹட்சன் சமரசிங்க மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

1987 இல் கொழும்பில் வன்முறைகள் வெடித்த போது எமது படையினரை யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு கொண்டு வருமாறு கூறியவர் ரொனி டி. மெல். இந்திய விமானங்களிலேயே எமது படையினர் அப்போது கொழும்புக்கு கொண்டு வரப்பட்டனர்.

இந்தியாவுடன் உடன்படிக்கை செய்த பின்னர் பிரபாகரனின் உறவினர் உட்பட 17 பேர் பிடிபட்டனர். அவர்களைக் கொழும்புக்குக் கொண்டுவர தீவிரமாக கவனம் செலுத்தியவர் எம்முடன் இருந்த ஒருவரே. அந்த 17 பேரையும் கொண்டுவர இடமளிக்காவிடில் பதவி விலகுவேன் என்றும் அவர் கூறினார். அவர்களைக் கொண்டு வர முயற்சி எடுத்தபோது 17 பேரும் சயனைட் அருந்தினர்.

இதனால் மீண்டும் அமைதி குலைந்தது. ஆயுதங்களை கீழே வைக்க முன்வந்த புலிகள் எண்ணத்தை மாற்றிக் கொண்டனர்.

விடுதலைப் புலிகளை தடை செய்ய வேண்டுமென முதன் முதலில் கோரியவர் திரு. பிரேமதாஸ தான். ராஜீவ் கொல்லப்பட்ட பின்பே இந்தியா புலிகளைத் தடை செய்தது.

புலிகளை போஷித்து வளர்த்தவர்கள் நாம் அல்லர். அவர்களுக்கு யார் பயிற்சி கொடுத்தனர் என்ற விடயம் இன்று அம்பலமாகி உள்ளது.

இப்படி அவர் கூறினார். (இ-3)

## கிழக்கு பல்கலையில் முகாமைத்துவ நெறி

மட்டக்களப்பு, மே 28

வியாபார முகாமைத்துவ டிப்ளோமா, சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா கற்கை நெறிகளை கற்க விரும்பும் மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்களை கிழக்குப் பல்கலைக் கழகம் கோரியுள்ளது.

ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்கள் சித்தி பெற்றிருப்பதுடன், முகாமைத்துவம் சார்ந்த துறை ஒன்றில் இரண்டு வருட அனுபவமுள்ளவர்கள் எதிர்வரும் ஜூன் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கலாம் என கிழக்குப் பல்கலைக்கழக பதிவாளர் தெரிவித்துள்ளார். (ஓ)

## லொறியில் பொருள்கள் எடுத்துவர வவுனியா அரச அதிபரிடம் அனுமதி

கொழும்பு, மே 28

வவுனியாவில் இருந்து வடக்கே உணவுப் பொருள்களை லொறியில் எடுத்து வர வவுனியா அரச அதிபரிடம் அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அனுமதிப் பத்திரத்துக்குரிய விண்ணப்பங்களை உதவி அரசாங்க அதிபர்களின் சிபார்சுடனும், பின்னர் வவுனியா இராணுவத் தளபதியின் சிபார்சுடனும் கையளித்து அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

அரசாங்க அதிபர் இல்லாத இடத்து மேலதிக அரச அதிபர் திரு. றணவக்கவிடம் அல்லது தலைமையக உதவி அரச அதிபர் எஸ். ரகுநாத பிள்ளையிடமிருந்து அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த 5)

## வற்றாப்பளை சம்பவம் குறித்து அறிக்கை

யாழ்ப்பாணம், மே 28

வற்றாப்பளை அம்மன் கோவிலில் இம்மாதம் 18 ஆம் திகதி இராணுவத்தினர் பக்தர்கள் மீது ஷெல் தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பாக செஞ்சிலுவைச் சங்க முல்லைத்தீவுக் கிளை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது

இறந்தவர்கள், காயப்பட்டவர்கள் அனைவரும் பொது மக்கள் என்றும், சரித்திரப் பிரசித்தி பெற்ற ஸ்தலத்தில் நடந்த இத்துக்ககரமான சம்பவத்தை நியாயப்படுத்த முடியாது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிரியர் பதவிகளுக்கு காத்திருப்போர் பட்டியல்

### விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

கொழும்பு, மே 28

அரசாங்க ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படும் போது பரிசீலனை செய்வதற்கு என காத்திருப்போர் பட்டியல் ஒன்று தயாரிக்கப் பட்டுள்ளது. அந்தப் பட்டியலில் பதிவு செய்வதற்கு வேலையற்றிருக்கும் பயிற்றப் பட்ட ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தனியார் பாடசாலைகளில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையங்களில் ஆசிரியர்களாகக் கடமையாற்றியவர்களும், அரசாங்க ஆசிரிய பயிற்சிக் கலாச்சாலையில் பயிற்சியை பெற்றுக் கொண்டவர்களும் தற்போது வேலையில்லாது இருந்தால் காத்திருப்போர் பட்டியலில் பதிவு செய்வதற்கு விண்ணப்பிக்க முடியும்.

அனுராதபுரம், பொலன்னறுவை, மொனறாகலை, அம்பாறை, திருகோணமலை, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, மட்டக்களப்பு, ஆகிய மாவட்டங்களில் தற்போது வெற்றிடங்கள் இருக்கின்றன.

மத்திய, சப்ரகமுவ மாகாணங்களிலும், களுத்துறை மாவட்டத்திலும் தமிழ்மொழி மூல ஆசிரியர்களுக்கு வெற்றிடங்கள் இருப்பதாக கல்விச் சேவைகள் சபை தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட மாவட்டங்களில் சேவையாற்றுவதற்கு விருப்பமுடையவர்களிடம் இருந்தே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன,

அடுத்த மாதம் 5 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் —

செயலாளர், கல்விச் சேவைகள் சபை, இசுருபாய, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும் — அறிவிக்கப்படுகிறது.

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மே 28

நாளை மறுதினம் [சனிக்கிழமை] நடைபெறவிருந்த — தெரிவுசெய்யப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான — கருத்தரங்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. [த]

## பார்வையாளர் கலரியிலிருந்து வெளியேற்றம்

நாடாளுமன்ற அமர்வுகள் கடந்த வியாழக்கிழமை இடம் பெற்றபோது மக்கள் கலரியில் அமர்ந்து சபை நடவடிக்கைளை அவதானித்துக் கொண்டிருந்த பொது மக்கள் காலை 10-20 மணியளவில் திடீரென கலரியில் இருந்து வெளியேற்றப்பட்டனர்.

அப்போது பொது மக்கள் கலரியில் சில பௌத்த பிக்குகளும் அமர்ந்திருந்தனராம்.

## சிகரெட் விளம்பரங்களுக்கு தடை!

சிங்கப்பூர், மே 28

சிங்கப்பூரில் விற்பனையாகும் வெளிநாட்டுச் சஞ்சிகைகள், பத்திரிகைகள் என்பவற்றில் சிகரெட் விளம்பரங்கள் இடம்பெறக்கூடாது என சிங்கப்பூர் அரசு தடை விதித்துள்ளது.

இந்தத் தடை அடுத்த செப்டம்பர் முதல் அமுலுக்கு வரும் எனவும் அரசு அறிவித்துள்ளது.

உள்ளூர் வெளியீடுகளில் இத் தடை ஏற்கனவே அமுலில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. [ஒ-10]


## யாழ். பல்கலைக்கழகம்

### மகாபொல கொடுப்பனவு - 5-ம், 6-ம் தவணைப் பணங்கள்

மேற்படி கொடுப்பனவுக்கான ஒழுங்குகள் பின்வருமாறு செய்யப்பட்டுள்ளது.

**முதலாம் வருடம் (1 - 6 தவணைப் பணங்கள்)**

மருத்துவபீடம்
கலைப்பிரிவு
வர்த்தகப்பிரிவு
வியாபார நிர்வாகப்பிரிவு
உயிரியல் விஞ்ஞானப்பிரிவு
பௌதீக விஞ்ஞானப் பிரிவு

28-05-92 9-00 — 12-00 மு. ப.
01-06-92 9-00 — 12-00 மு. ப.
03-06-92 9-00 — 12-00 மு. ப.

**இரண்டாம் வருடம்**

மருத்துவபீடம்
கலைப்பிரிவு
வர்த்தகப்பிரிவு
வியாபார நிர்வாகப்பிரிவு
உயிரியல் விஞ்ஞானப்பிரிவு
பௌதீக விஞ்ஞானப்பிரிவு

28-05-92 1-30 — 3-00 பி. ப.
01-06-92 1-30 — 3-00 பி. ப.
03-06-92 1-30 — 3-00 பி. ப.

**மூன்றாம் வருடம்**

மருத்துவபீடம்
கலைப்பிரிவு
வர்த்தகப்பிரிவு
வியாபார நிர்வாகப்பிரிவு
உயிரியல் விஞ்ஞானப்பிரிவு
பௌதீக விஞ்ஞானப்பிரிவு

29-05-92 9-00 — 12-00 மு. ப.
02-06-92 9-00 — 12 00 மு. ப.
04-06-92 9-00 — 12-00 மு. ப.

**நான்காம் வருடம்**

மருத்துவபீடம்
[4ஆம், 5ஆம் வருடங்கள்]
கலைப்பிரிவு
வர்த்தகப்பிரிவு
வியாபார நிர்வாகப்பிரிவு
உயிரியல் விஞ்ஞானப்பிரிவு
பௌதீக விஞ்ஞானப்பிரிவு

29-05-92 1-30 — 3-00 பி. ப.
02-06-92 1-30 — 3-00 பி. ப.
04-06-92 1-30 — 3-00 பி. ப.

கொடுப்பனவின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டியவை :
1. பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டை
2. ரூபா 2/- பெறுமதியான முத்திரை

[சி/2365] — பதிவாளர்



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1992-7-17 வரை விண்ணப்பங்கள் என்னால் ஏற்றுக்கொள்ளப் படும்.

உடலமைப்பியலில் சிரேட்ட விரிவுரையாளர் தரம் 11/ விரிவுரையாளர்/ உதவி விரிவுரையாளர்.

**சம்பள அளவுத் திட்டம் :**

சிரேட்ட விரிவுரையாளர் தரம் II :
ரூபா 8,000 — 5x250 — 9,250/- மாதமொன்றுக்கு

விரிவுரையாளர் (மருத்துவம்) :
ரூபா 4,500 — 10x200 — 6,500/- மாதமொன்றுக்கு
(மருத்துவ பீடத்தின் விரிவுரையாளருக்கு முதல் நியமனத்தின் போது மேற்குறித்த சம்பள அளவுத்திட்டத்தில் இரண்டு படி அதிகமாக வழங்கப்படல் வேண்டும். அதாவது 4,900/- சம்பளத்தில் வைக்கப்படல் வேண்டும் )

உதவி விரிவுரையாளர் :
ரூபா 3,900/- மாதமொன்றுக்கு (நிலையானது) ஓராண்டிற்கு ஓராண்டுத் திருப்திகரமான சேவையை நிறைவு செய்த பின்னர் துணை வேந்தர் ரூபா 4,500 — 10x200 — 6 500/- (மாதமொன்றுக்கு) சம்பள அளவுத் திட்டத்தில் 4,500/- சம்பளப் படியில் வைப்பார்.

1. மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப்படிவங்களையும் இதர விவரங்களையும் இப்பல்கலைக் கழக தாபனக்கிளையின் சிரேட்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

2. விண்ணப்பப்படிவங்களைத் தபாலில் பெற விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களுக்கான வேண்டுகோளுடன 23 x 10 ச. மீற்றர் அளவுடைய சுயமுகவரியிட்டு முத்திரை ஒட்டப்பட்ட கடித உறை இணைத்தனுப்பப்படல் வேண்டும்.

3. அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் என்பனவற்றிலுள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

4. ஒரு பதவிக்கு மேல் விண்ணப்பிக்க விரும்புவோர் தனித்தனி விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

5. தெரிவு செய்யப்படும் அபேட்சகர்களின் சிறப்புத் தகைமைகளையும்/ அல்லது அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத்திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1992 - 05 - 25
[C/2366]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் ... நூலகம்
யாழ்ப்பாணம்



### இரு உணர்ச்சிமயமான விவகாரங்களைக் கொண்டு

# தமிழக அரசுடன் மோத எதிரணிகள்

## உறுதியான களம் அமைக்கின்றன

சென்னை, மே 28

தமிழக எதிர்க்கட்சிகள் இரண்டு உணர்ச்சிமயமான விவகாரங்களை அடிப்படையாகக் கொண்டு ஜெயலலிதாவின் அ. தி. மு. க. அரசுடனான இன்னொரு சுற்றுப் போராட்டத்துக்கு மெது மெதுவாக, ஆனால் உறுதியாக களத்தைத் தயார் செய்து வருகின்றன.

இலங்கைத் தமிழர் பிரச்சினை, காவிரி நீர் சச்சை ஆகியவையே அந்த இரண்டு விவகாரங்களும் ஆகும்.

வன்னியர் சமூகத்தின் செல்வாக்கைக் கொண்ட பாட்டாளி மக்கள் கட்சி, புலிகள் மீதான தடை விவகாரத்தை ஏற்கனவே கிளப்பியிருக்கிறது. புலிகளுக்குத் தொடர்ந்தும் நாம் ஆதரவளிப்போம் முடியுமானால் எனக்கு எதிராகவும், கட்சிக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கட்டும் பார்க்கலாம் என்று பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் இராமதாஸ் ஏற்கனவே சவால் விட்டுள்ளார்.

ஏனைய சில கட்சிகளும் புலிகளுக்கு நேரடியாக ஆதரவு தெரிவிக்காமல் இராமதாஸின் இந்தப் போராட்டத்தில் இணையலாம் என்று அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

புலிகளைத் தடை செய்த பிறது இலங்கைத் தமிழர் பிரச்சினையை மத்திய அரசாங்கம் எவ்வாறு தீர்க்கப் போகின்றது என தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி கேள்வி எழுப்பியுள்ளார்.

புலிகள் இயக்கத்தை ஆதரிக்கும், அல்லது அவ்வியக்கத்துடன் தொடர்புகளை வைத்திருக்கும் எந்த ஒரு தனி நபரையும் அல்லது குழுவையும் கைது செய்வதற்கான அதிகாரத்தை புலிகள் மீதான தடை அதிகாரிகளுக்கு வழங்கியிருக்கிறது என்ற போதிலும், இந்த அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்யக் கூடாது என்று மத்திய அரசு தமிழக அரசிடம் திரும்பத் திரும்ப வலியுறுத்திக் கூறியுள்ளது.

இந்த நிலையில் —

உணர்ச்சி பூர்வமான விவகாரங்களில் சிலவகை ஐக்கியப்பட்ட நடவடிக்கைகள் தேவை என்று கட்சிகளின் தலைவர் உத்தியோக பூர்வமற்ற சந்திப்புக்களின்போது இணங்கிக் கொண்டுள்ளனர்.

அத்துடன் ஏற்கனவே உஷாருட்டப்பட்டு இருக்கும் தமிழக அரசியல் சூழ்நிலை அ. தி மு. க. அரசுக்கு எதிராக முழு அளவிலான அரசியல் தாக்குதல் ஒன்றை நடத்துவதற்கு ஏதுவாக அமையும் என்றும் தலைவர்கள் கருதுகிறார்கள். [ஒ-3]

## ஏயர்லங்கா விமானத்தில் நடுவானில் பயணிகள் ரகளை

### மீண்டும் தரையிறக்கப்பட்டது

கொழும்பு, மே 28

கொழும்பில் இருந்து ஜப்பான், டோக்கியோ நோக்கிப் பறந்து கொண்டிருந்த 'ஏயர்லங்கா' விமானத்தில் நடுவானில் வைத்து பயணிகள் மேற்கொண்ட ரகளையை அடுத்து மீண்டும் விமானம் கட்டுநாயக்காவில் தரையிறக்கப்பட்டது.

ஜப்பானில் இருந்து கொழும்பு வந்திருந்த கலைஞர்கள் குழு ஒன்று கொழும்பில் 'டெத் அன்ட் றிபேர்க்' என்ற கலை நிகழ்ச்சியை நடத்திவிட்டு கடந்த திங்கட்கிழமை பிரத்தியேகமாக அமர்த்தப்பட்ட 'ஏயர் லங்கா ட்ரைஸ்டார்' விமானத்தில் கட்டுநாயக்காவில் இருந்து டோக்கியோ நோக்கிப் புறப்பட்டனர்.

விமானம் புறப்பட்டு ஒன்றரை மணித்தியாலங்கள் பயணம் செய்த நிலையில், நடுவானில் விமான கப்டனுடன் பயணிகள் தர்க்கப்பட்டனர்.

ஜப்பானில் இருந்து இந்த விமானத்தைத் திரும்ப ஓட்டி வருவதற்கான பணி ஒப்படைக்கப்பட்டிருந்த 'மேலதிக விமான ஊழியர்கள்' விமானத்தின் முதலாம் தர இருக்கையில் அமர்ந்திருந்ததை ஜப்பானியர்கள் கடுமையாக ஆட்சேபித்தனர்.

அவர்கள் தகாத வார்த்தைகளால் கப்டனையும் ஏனையோரையும் ஏசினர். நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் விமானக் கப்டன் மீண்டும் கட்டுநாயக்காவில் விமானத்தை இறக்கினார்.

பின்னர் விமானம் மறுநாளே டோக்கியோ புறப்பட்டது. [ஒ-3]

## ம.எண்ணெய் லொறிகளை விடுவிக்க உத்தரவு!

கொழும்பு, மே 28

வடபகுதிக்கு எடுத்துவரப்பட்ட சமயம், மாஹோ பொலீஸாரால் 90 பீப்பாய் மண்எண்ணெயுடன் தடுத்து வைக்கப்பட்ட இரண்டு லொறிகளையும், மண்எண்ணெயையும் உரிமையாளரிடம் திருப்பி ஒப்படைக்குமாறு கொழும்பு நீதிவான் செல்லி தென்னக்கோன் உத்தரவிட்டார்.

இது தொடர்பாக கைது செய்து குற்றம் சாட்டப்பட்ட மாடசாமி, சந்திரதாஸ் ஆகியோரை விடுதலை செய்யுமாறும் அவர் உத்தரவிட்டார்.

அன்றாட பாவனையில் உள்ள மண்எண்ணெய் போன்ற திரவ எரிபொருள்களைக் கொண்டு செல்லலாம் என்றும் நீதிவான் உத்தரவிட்டார். [இ-3]

## ஆண் தாதி கர்ப்பம்! அடுத்த மாதம் பிரசவம்!!

### பிலிப்பைன்ஸில் அதிசயம்

ஆண் ஒருவர் கர்ப்பம் தரித்து டாக்டர்களை அதிசயத்தில் ஆழ்த்தி உள்ளார். தென் பிலிப்பைன்ஸில் 32 வயதான அரசாங்க ஊழியரான ஆண் தாதி ஒருவரே 6 மாத கர்ப்பமுற்றிருக்கிறார்.

பல டாக்டர்கள் இவரைப் பரீட்சித்து, அவர் கருவுற்று இருக்கிறார் என்பதை ஊர்ஜிதம் செய்தனர்.

"கார்லோ" எனப் புனைபெயர் சூட்டப்பட்டிருக்கும் அவருக்கு ஆண் உறுப்பு, பெண் உறுப்பு ஆகிய இரண்டும் அமைந்துள்ளன.

கார்லோவின் கருப்பையில் முற்றிலும் ஆரோக்கியமான குழந்தை இருப்பதாகவும் —

அடுத்த மாதமளவில் சத்திர சிகிச்சை மூலம் குழந்தை ஒன்றை அவர் பெற்றெடுக்க உள்ளதாகவும் டாக்டர்கள் கூறியுள்ளனர்.

ஆனால் அவருக்கு சில பிரச்சினைகள் உள்ளன. "கார்லோ" பிரசவ கால விடுமுறை கோரியுள்ளார் சட்டப்படி ஆண் ஒருவருக்குப் பிரசவகால விடுமுறை வழங்கப்படமாட்டாது. அதே சமயம் அவர் தனது காதலனை மணக்கவும் விரும்புகிறார். எனினும் ஓர் ஆண் இன்னோர் ஆணை மணக்க திருச்சபை இடம் கொடுக்க மறுத்து விட்டது. [ஒ-த]

## லட்சார்ச்சனை பூர்த்தி விழா

யாழ்ப்பாணம், மே 28

வண்ணார்பண்ணை அருள்மிகு வாலாம்பிகா சமேத விசுவலிங்க வைத்தீசுவர சுவாமி கோவில் [வண்ணை சிவன் கோவில்] லட்சார்ச்சனை பூர்த்தி விழா இன்று வியாழக்கிழமை நடைபெறுகின்றது. [த]

## அனுராதபுரத்தில் பாதுகாப்பு

கொழும்பு மே 28

எதிர்வரும் பொசன் போயாவின் போது அங்கு கூடவிருக்கும் ஆயிரக்கணக்கான யாத்திரிகர்களுக்குப் போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இவர்களுக்குத் தேவையான பாதுகாப்பு மற்றும் சகல வசதிகளும் செய்யப்பட்டுள்ளதாக அதிகாரபூர்வமாகப் பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. [ஒ]

## சாட்சியமளிக்க வருமாறு அழைப்பு

கொழும்பு, மே 28

முல்லைத்தீவு மாவட்டம் வற்றாப்பளை கண்ணகை அம்மன் கோவில் பகுதியில் இடம் பெற்ற ஷெல் தாக்குதலில் பொதுமக்கள் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களை சாட்சியமளிக்க வருமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. தர்மகுலசிங்கம் ஊடாக இக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சாட்சியங்கள் வவுனியா கச்சேரியில் வைத்து பதிவு செய்யப்படுவது தெரிந்ததே.

## ஒலிபரப்பாளர் காலமானார்

கொழும்பு, மே 28

பிரபல கலைஞரும், பழம்பெரும் ஒலிபரப்பாளருமான திரு. வி. ஏ. சிவஞானம் [67 வயது] கடந்த ஞாயிறன்று தெஹிவளையில் காலமானார். [ஒ]

## உருகும் பனித்தீவில் சிக்கி தவிக்கும் விஞ்ஞானிகள்!

### காப்பாற்ற மீட்புப்படை விரைவு

வாஷிங்டன், மே 28

அன்டார்க்ரிக் பிரதேசத்தில் வெடல் (Wedell) என்ற கடலில் உருகிக் கொண்டிருக்கும் மிதக்கும் பனித்தீவில் சிக்கி நிர்க்கதிக்குள்ளாகி இருக்கும் 32 விஞ்ஞானிகளைக் காப்பாற்றுவதற்காக பனிக்கட்டிகளை உடைத்துக் கொண்டு செல்லும் இரண்டு கப்பல்கள் (Ice-breakers) அங்கு கடந்த வெள்ளிக்கிழமை அனுப்பி வைக்கப்பட்டன.

கடந்த பெப்ரவரியில் அந்த மிதக்கும் பனித்தீவில் 17 அமெரிக்க விஞ்ஞானிகளும், 15 ரஷ்ய விஞ்ஞானிகளும் ஆராய்ச்சி நிலையம் ஒன்றை நிறுவினர். அன்டார்க்ரிக் வளிமண்டலம் மற்றும் நீர் பற்றிய ஆய்வுகளை நடத்த அந்த நிலையம் அமைக்கப்பட்டது.

தென்துருவ பிரமாண்டமான பனி மலையில் இருந்து உடைந்து பிரிந்து சென்ற பனிக்கட்டியே அந்த மிதக்கும் தீவாகும்.

ஆரம்பத்தில் 2 கிலோ மீற்றர் நீளமும் 1.5 கிலோ மீற்றர் அகலமும் கொண்டிருந்த அந்த மிதக்கும் பனித்தீவு திசைமாறி வடபகுதி நோக்கி — வெப்பம் நிறைந்த கடலுக்கு நகரத் தொடங்கியது.

அப் பகுதியில் வெப்பம் அதிகரிக்கவே பனிக்கட்டித் தீவில் இருந்து பனிக்கட்டிகள் துண்டு, துண்டாக உடைந்து, உருகி, கரைந்து போக ஆரம்பித்தன.

தென் ஆபிரிக்காவின் தென் முனையில் இருந்து சுமார் ஆயிரத்து 500 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள வெடல் கடலை நோக்கி மீட்புப் படையினர் விரைந்துள்ளனர்.

அங்கு சென்று கொண்டிருக்கும் அமெரிக்க ஐஸ் பிரேக்கரின் பெயர் "நதானியல் பால்மர்" என்பதாகும். அது சிலி நாட்டுத் துறைமுகம் பன்ரா அரேனாஸில் இருந்தும் —

'அக்கடெமிக் பெடரோவ்' என்ற பெயருள்ள ரஷ்ய ஐஸ் பிரேக்கர் மொன்ரிவிடியோ துறைமுகத்தில் இருந்தும் உருகிக் கொண்டிருக்கும் பனித்தீவு நோக்கி விரைந்து கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்கக் கப்பலான 'பால்மர்' வளைகுடா யுத்தத்தின் போது இரவு நேரத் தாக்குதலுக்கு நேசப் படைகளால் பயன்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. [ஒ-எ]

## கொழும்பு, பாலத்துறையில் 4 தமிழ் இளைஞர் கைது

கொழும்பு, மே 28

கொழும்பு, பாலத்துறை பகுதியில் வைத்து கடந்த ஞாயிறு இரவு 4 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் இருவர் போலி ஐநூறு ரூபா நோட்டுக்களை மேற்படி பகுதி கடை ஒன்றில் மாற்ற முனைந்த போது கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த இருவரில் ஒருவர் தலைமன்னாரைச் சேர்ந்தவர் என்றும் மற்றவர் கிராண்பாஸைச் சேர்ந்தவர் என்றும் கூறப்படுகிறது.

கடைக்காரர் கொடுத்த தகவலை அடுத்து பொலீஸார் இவர்களைக் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்திய சமயம், மேலும் இருவர் கைதானதாகவும் தெரிவிக்கப்பட்டது. [ஒ]

## நினைவு தினம்

யாழ்ப்பாணம், மே 28

அமரர் சி. பொ. வேலாயுதபிள்ளையின் நினைவு தின நிகழ்ச்சிகள் கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழக அரங்கில் எதிர்வரும் ஞாயிறு மாலை 6 மணிக்கு இடம் பெறவுள்ளன.

கழகத் தலைவர் திரு. செ. செல்வராசா நிகழ்ச்சிக்குத் தலைமை வகிப்பார். பிரமுகர்கள் பலரும் நினைவுரைகள் நிகழ்த்துவர். [ஒ]

## கடற்றொழில் பீடம்: அமைக்க குழு நியமனம்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கடற்றொழில் பீடத்தை அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள 9 பேர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நடைபெற்ற பல்கலைக்கழக மூதவைக் கூட்டத்தின் போது இந்தக் குழு நியமிக்கப்பட்டு, மேற்கொள்ள வேண்டிய ஏற்பாடுகள் பற்றியும் ஆராயப்பட்டது.

கடற்றொழில் கற்கை நெறிக்கான பாடத்திட்டங்கள், வேலைத் திட்டம் போன்ற விடயங்கள் குறித்தும் இந்தக் குழு ஆராயும்.

### தேசிய அடையாள அட்டைக்கான

## விண்ணப்பபடிவங்களுக்காக மக்கள் அலைகிறார்கள்

தேசிய அடையாள அட்டை பெற விண்ணப்பிப்பதற்குத் தேவையான விண்ணப்பப் படிவங்களைத் தேடி யாழ்ப்பாண மக்கள் யாழ். செயலகத்தில் இருக்கும் ஆட்பதிவுத் திணைக்களத்துக்கும் கிராமசேவை அலுவலகங்களுக்கும் அலைந்து திரிகின்றனர்.

இந்த விண்ணப்பப்படிவங்கள் முடிவடைந்து சில மாதங்களாகியும் அவை கொழும்பிலிருந்து இன்னும் அனுப்பி வைக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-100]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

மில்விற்கு தேவையான Grinder No- 7 Huller விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திரு. சு. ஜெயானந்தன், 83/16, அரசடி றோட், தஞ்சி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
[21152]

---

நீண்ட கால பாவனைக்கு உங்கள் படங்களை சிறந்த முறையில் பிறேம் செய்து கொள்ளவும், மற்றும் சுவாமி படங்கள், சோக்கேஸ் கண்ணாடிகளைக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளவும் யாழ். நகரில், யாழ். கண்ணாடி நிலையம், இல. 234, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
[21119]

### மணமகன் தேவை

சாவகச்சேரி, இந்து, பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியை வயது 37, நட்சத்திரம் உத்தராடம், 1ஆம் பாதம், செவ்வாய்க் குற்றமற்றவர். அரச கூட்டுத்தாபன ஊழியர், தனி முதலீட்டாளர் தென்மராட்சிப் பகுதியில் விரும்பத்தக்கது. சீதனம் வீட்டுடன் கொடுக்கப்படும். குமாரசாமி, காளி கோவிலடி, டச்சு வீதி, சாவகச்சேரி வடக்கு.
[21141]

### இலவச திருமண சேவை

36 வயது, B.Sc, மகம்' லண்டனில் தொழில் புரிபவருக்கும், 37 வயது, பூரம், செவ்வாய் 4, B.A ஆசிரியைக்கும் ஏற்ற மணமக்கள் தேவை. மாற்றுச் சம்பந்தமும் கவனிக்கப்படும். து. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி.
[4888]

---

29 வயது, கேட்டை, செவ்வாய் 12 ஆசிரியைக்கு ஏற்ற மணமகனை பெற்றோர் தேடுகின்றனர். தொடர்பு ஞாயிறு காலையில் மட்டும்: து. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி.
[4887]

---

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்.

## கலை/வர்த்தகம்/ முகாமைத்துவம்

## 1ஆம், 2ஆம், 3ஆம் 4ஆம் கல்வியாண்டு- ஆண்டு இறுதிப் பரீட்சை - 1991

மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தகுதி வாய்ந்த சகல வருட மாணவர்களும் 30-06-1992 இற்கு முன்பாக யாழ். பல்கலைக் கழகம், பரீட்சைக் கிளையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். மீள் பரீட்சார்த்திகள் தகுந்த கட்டண பற்றுச்சீட்டுடன் தமது விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்தல் வேண்டும். இக் குறிப்பிட்ட திகதிக்குப் பின் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

- பதிவாளர்.

[சி-2360]

### தேவை

பழரச பானங்கள் விற்பனை செய்வதற்கு சைக்கிள் விற்பனையாளர்கள் தேவை. திறமையுள்ளவர்கள் நல்ல கொமிசன் பெறலாம். விண்ணப்பிககவும். இல. 845, C/o உதயன்.
[சி-2620]

### மணப்பெண்கள் தேவை

37வயது, இந்து, சொந்தமில் வைத்திருப்பவருக்கும், சைவ யோசன 7 இல் செவ்வாய், 36 வயது ஆசிரியருக்கும், கத்தோலிக்க B.Sc, 31 வயது, விரிவுரையாளருக்கும், கத்தோலிக்க 26 வயது டாக்டருக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.
[21157]

---

யாழ். செவ்வாய்க் குற்றமற்ற 41 வயது, Ph.D. விரிவுரையாளருக்கும், 8 இல் செவ்வாய் 42வயது T.Aக்கும், குற்றமுள்ள 35வயது, வங்கியாளருக்கும், குற்றமற்ற 36 வயது எஞ்ஜினியருக்கும், 38 வயது பட்டதாரிக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.
[21156]

### றப்பர் ஸ்டாம்ப்

தென்மராட்சி மக்களுக்கு ஓர் நற்செய்தி. உங்களுக்கு தேவையான றப்பர் ஸ்டாம்புகளை விரும்பிய டிசைன்களில் செய்து கொள்ள இன்றே நாடுங்கள். சோதி அச்சகம், மேல்மாடி இல. 25, தனன்களப்பு வீதி, சாவகச்சேரி.
[சி-2358]

### O/L கணிதம்

92 பரீட்சையில் ஒரே தரத்தில் உயர்ந்த பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆசிரியர் B.Sc (Cey.) 85, சிவன் கோவிலடி, திருநெல்வேலி.
[21161]

### சோதிடம்

ஜாதகக் குறிப்பு, கைரேகை, எண் சோதிடம், விவாகப் பொருத்தம் பார்க்க தொடர்பு: நேரம் தினமும் பிற்பகல் 2-00 மணி முதல், மாலை 7-00 மணி வரை. த. சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 249 (311), நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தலைமை: 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. தினமும் காலை 7-00 — 12-00 வரை
[21118]

---

## வண்ணை சிவன்கோவில்
## லட்சார்ச்சனை பூர்த்தி விழா

**காலம்: 28-5-1992 (இன்று)**

காலை 7-00 மணிக்கு சங்காபிஷேகம்

மாலை 5 00 மணிக்கு சிறப்பு நிகழ்ச்சிகள்

### மங்கள இசை

| இன்னிசை வேந்தர்கள் | தவில் வித்துவான்கள் |
|---|---|
| திரு. பஞ்சாபீகேஷன் | திரு. புண்ணியமூர்த்தி |
| திரு. பத்மநாதன் | திரு. நித்தியானந்தம் |
| திரு. சுந்தரமூர்த்தி | திரு. முருகதாஸ் |
| திரு. சிதம்பரநாதன் | திரு. ரவீந்திரன் |
| திரு. பஞ்சமூர்த்தி | திரு. உதயசங்கர் |
| திரு. கேதீஸ்வரன் | திரு. சுதாகர் |

மாலை 8 00 மணிக்கு கருத்தரங்கம்

பங்குபற்றுபவர்கள்:

திரு. க. சிவராமலிங்கம்
திரு. க. சொக்கலிங்கம்
திரு. இ. ஜெயராஜ்

ஒலி- நித்தி, ஒளி - றஸ்மி

[சி/2623]

---

## COMPUTER CLASSES

★ BASIC ★ LOTUS 1 - 2 - 3
★ d BASE - III+

ஆரம்பம்:
30 — 05 — 1992 (வார இறுதி நாட்கள்)
01 — 06 — 1992 (வார நாட்கள்)

விசேட செய்முறைப் பயிற்சியுடன் துரித பயிற்சிநெறி

விவரங்களுக்கு:-

**N. C. T. I.**
14, St. Peter's Lane,
Hospital Road,
Jaffna.

[சி-2624]

---

## ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை ஆகஸ்ட் 3ஆம் திகதி

யாழ்ப்பாணம், மே 28 1992 ஜி சீ. ஈ [உயர்தர] பரீட்சை ஆகஸ்ட் மூன்றாம் திகதி ஆரம்பமாகவிருக்கிறது.

யாழ். மாவட்டத்தில் பரீட்சை நடைபெறும் நிலையங்கள், மேற்பார்வையாளர் விவரங்கள் ஆகியவற்றை அனுப்பி வைக்குமாறு பரீட்சைத் திணைக்களம் யாழ். கல்வித் திணைக்களத்தைக் கோரியுள்ளது.

---

## தேவை

வண்ணை சிவன் கோயிலுக்கு மங்கள வாத்திய சேவை தேவை. தகுதியுள்ளவர்கள் 1-6-1992 க்கு முன்னர் எழுத்து மூலம் தேவஸ்தானத்திற்கு விண்ணப்பிக்கவும்,

[சி-2625] — ஆலய பரிபாலன சபை.

---

உ
கற்பகன் துணை
தென்கோவை

## கற்பகப்பிள்ளையார் கோவில்
## வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம்

மேற்படி ஆலய மஹோற்சவம் எதிர்வரும் 29-05-1992 வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து 14 நாட்கள் நடைபெற்று 12-06-1992 அன்று ரதோற்சவமும், 13-06-1992 தீர்த்தோற்சவமும், 14-06-1992 அன்று வசந்தோற்சவமும் இடம்பெறத் திருவருள் பாலித்துள்ளது.

மஹோற்சவ பிரதமகுரு:
சிவஸ்ரீ இ. இரத்தினேஸ்வரக் குருக்கள்

மேற்படி ஆலய அறங்காவலர்
சு. பாலசுப்பிரமணிய தேசிகர்

தென்கோவை,
கற்பகப்பிள்ளையார் தேவஸ்தானம்,
இருபாலை - கோப்பாய். (21163)

---

## வெற்றுப் போத்தல் கொள்வனவு

எமது சங்கத்தில் பியர், ஸ்ரவுட், மற்றும் அதே அளவுடைய வெற்றுப் போத்தல்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் கொள்வனவு செய்யப்படுகின்றன. விலை நேரில் பேசித் தீர்க்கப்படும்.

சங்கத்தின் சகல கிளை நிலையங்களிலும் கொள்வனவு செய்யப்படும்.

பொது முகாமையாளர்,
கோண்டாவில் - இணுவில்,
தெ. ப. பொ. கூ. சங்கம்,
கற்பகதரு - தாவடிச் சந்தி,
கோண்டாவில்.

[சி-2617]

---

நலம் தானா......?
உடலும், உள்ளமும் நலம்தானா......?

கண்டறிய இன்று மாலை வாருங்கள்!

## "சுகநலம்" - கூத்து

இடம்:- யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி, யுபிளி மண்டபம்.

நேரம்:- இன்று மாலை 5-00 மணி.

ROTARACT CLUB

யாழ்.மிட்-ரவுண் றோட்டறக்ட் கழகம் வழங்கும் நிகழ்ச்சி

[சி-2364]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### முதுகுவலி போய் திருகுவலியா?

பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்கு நாணயத்தின் மதிப்பைக் குறைப்பது குறித்து அரச நிதித்துறை வட்டாரங்கள் ஆலோசித்து வருவதாகச் செய்திகள் வந்துள்ளன.

நாட்டின் பொருளாதாரம் எப்போதும் இல்லாதவாறு அதள பாதாளத்துக்குச் சென்று விட்டது என்பது எல்லோரும் அறிந்த உண்மை. அரசியல் குறித்தோ அல்லது நாட்டின் நிதி நிலைமை குறித்தோ அக்கறை கொள்ளாத சாதாரண உழைப்பாளிக்குக் கூட நாட்டின் பொருளாதாரம் சீரழிந்துள்ளமை தெரியும்

விலைவாசிகள் நாளாந்தம் உயர்வதால் உண்டாகும் பாதிப்பு சாதாரண ஏழை மக்களின் வயிற்றில் அடியாக மாறுகிறது. பொருளாதாரச் சீர்கேட்டின் விளைவை அனுபவிப்பவர்கள் அவர்களே. ஆகையால் பொருளாதாரம் சீர்கெட்டிருப்பது அவர்களுக்கு தெரியாமலிருக்குமா?

இலங்கையின் சனத்தொகையில் எழுபது சத வீதத்தினருக்கும் அதிகமானோர் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் ஏழைகள். அவர்களில் பலர் ஒருநேர உணவு கூடக் கிடைக்காமல் பட்டினி கிடக்கிறார்கள்.

நாட்டுப் பொருளாதாரத்தை அரசியல் வாதிகளே காலத்துக்குக் காலம் சீரழிக்கின்றனர். அவர்களது விவேகமற்ற — தீர்க்கதரிசனமில்லாத — எழுந்தமானமான முடிவுகளாலும், செயற்பாடுகளாலும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்கள் மட்டும் பாதிக்கப்படவில்லை. மத்தியதர மக்களான மிகுதி 20 சத வீதத்தினரும் கூட பொருளாதாரச் சீரழிவால் வாடி வதங்குகின்றனர்.

இது போதாது என்று நாட்டு மக்களில் 90 சத விதமானவர்களை மேலும் வதைப்பதற்கான மற்றொரு அடியே நாணய மதிப்புக் குறைப்பு என்ற பேச்சு.

பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு ரூபா மதிப்புக் குறைப்பு ஒரு தீர்வா? அல்லது மக்கள் கஷ்டம் தீர்க்கும் மருந்தா? இல்லை; அது மேலும் மக்கள் மீது பளுவைச் சுமத்தும். மக்களது கழுத்தை நெரிக்கும் கொலைவாளே நாணய மதிப்புக் குறைப்பாகும்.

நாணய மதிப்பைக் குறைப்பதனால் சகல பொருள்களினதும் விலைகள் உயரும். ரூபா பெறுமதியற்றதாகி விடும். உற்பத்தி பெருகாமல் நாணய மதிப்பைக் குறைப்பதால் எதிர்பார்க்கும் பலன் கிடைக்கப் போவதில்லை. முதுகு வலியைத் தீர்க்கப் போய் திருகு வலியைத் தேடியதாகவே நாணய மதிப்புக் குறைப்பின் விளைவு அமையும் என்பதில் சந்தேகமே இல்லை.

பொருளாதாரச் சீர்குலைவைச் சரி செய்வதற்கு வழி உண்டு. இல்லாமல் இல்லை. வடக்கு — கிழக்கில் நடக்கும் யுத்தத்தை நிறுத்த வேண்டும். பாதுகாப்புச் செலவுக்கு ஒதுக்கப்படும் பணத்தை நாட்டின் உற்பத்தித் துறையின் விருத்திக்குச் செலவிட்டால் பொருளாதாரத்துறையை ஓரளவேனும் செம்மையாக்க முடியும்.

பாதுகாப்புவரியை உயர்த்துவதாலோ அல்லது நாணயத்தின் மதிப்பைக் குறைப்பதாலோ பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள முடியாது.

அரசாங்கமும், நிதித்துறை அதிகாரிகளும் இது குறித்து எப்போது சிந்திக்கப் போகிறார்கள்?

# இந்தியா அர்த்தமுள்ள பங்கினை வகிக்க முடியாது என ஒப்புதலாம்!

## புலிகள் மீதான தடை குறித்து "ரெலிகிராப்"

விடுதலைப் புலிகள் மீது இந்தியா விதித்துள்ள தடை குறித்து இந்தியாவின் முன்னணி ஆங்கிலத் தினசரி "ரெலிகிராப்" மே 16 இதழில் வெளியான அசிரியர் தலையங்கம் இங்கே தரப்படுகிறது.

கொழும்பு மத்திய அரசின் அதிகாரத்தைப் பலவீனப்படுத்துவதும் இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் ஓரளவு சுதந்திரம் பெற்ற ஈழம் (Quazi Independent Eelam) உருவாவதும் புதுடில்லியின் நலன்களை என்றும் பேணப்போவதாக இருந்ததில்லை.

பாக்குநீரிணைக்கு அப்பால் ஏற்படக்கூடிய சாத்தியமான தாக்கங்கள் இதற்குக் காரணமாக உள்ளன. ஆகவே, குறுகிய கட்சி அரசியல் லாபம் பெறுவதற்கு ஏற்றதாக இருந்த காரணத்தினால் இலங்கையில் தீவிரவாதத்தைப் புகுத்தி ஸதிரமின்மையை உருவாக்கும் ஒரே மனதான போக்குக் கடைப்பிடிக்கப்பட்டது.

அயல் நாட்டுக் கொள்கையில் இலங்கை தொடர்பான அனுபவம் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இதில் இருந்து இரண்டாவது கேள்வி எழுகின்றது. அதுதான், இலங்கையில் அமைதிகாக்கும் பணியில் ஈடுபட்டதால் இந்தியா அடைந்த லாபம் என்ன என்பதேயாகும். நேரடியான பதில்: 'அதிதான சிறிய பலனே' என்பதாகும்.

பிராந்திய பொலீஸ்காரராக பங்காற்றும்படி அமெரிக்காவும் அப்போதைய சோவியத் யூனியனும் இந்தியாவை ஊக்குவித்து வந்தன. அந்த ஆர்வம் காரணமாக ராஜதந்திரத்துக்குப் பதில் இராணுவ மோதல்களை அனுமதிப்பதில் உள்ள குறைபாடுகளைக் கவனிக்க இந்திய அரசு தவறிவிட்டது.

### இந்தியப் படைக்கு களங்கம்

இராணுவத் தலையீடு என்பது இரு பக்கங்களும் கூரான, அபாயகரமான வாள் போன்றது என்ற எச்சரிக்கையை வியட்னாம், கம்போடியா, ஆப்கானிஸ்தான் விவகாரங்கள் தந்திருக்க வேண்டும். இராணுவத் தலையீட்டின் வெற்றி உள்நாட்டில் பலன் தர முடியும்; ஆனால் தோல்வியோ வெளிநாட்டுக் கொள்கை பற்றிய மதிப்பீடுகளை பல தசாப்தங்களுக்குக் குழப்பிவிடமுடியும். யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்துவது என்பது இந்தியப் படையினருக்கு இயலாத காரியமாகி விட்டது. அதனால் இந்திய ஆயுதப்படையினரின் பெருமைக்குக் களங்கம் ஏற்பட்டது.

இந்த நிலை காரணமாக இலங்கையின் இறைமை பாதிக்கப்படுகின்றது என்ற அச்சம், அதன் காரணமாக பயங்கரமான விளைவுகள் ஏற்படலாம் என்ற நிலை ஆகியன ஒன்று சேர்ந்து நாட்டை விட்டு வெளியேறும்படி இந்தியப் படையை ஜனாதிபதி பிரேமதாஸ கேட்டுக் கொண்டார். இது இந்தியாவுக்கு அவமானத்தை இறுதியில் ஏற்படுத்தியது

### மீளவில்லை

இந்தப் பின்னடைவில் இருந்து இந்தியா உண்மையில் இன்னும் மீளவில்லை. கடந்த வியாழக்கிழமை விடுதலைப் புலிகள் மீது இந்தியா விதித்த தடையானது, இலங்கை விவகாரங்களில் அர்த்தமுள்ள பங்கை இந்தியா இனி வகிக்க முடியாது, என்பதை புதுடில்லி அரசு, வெளியே சொல்லாமல் ஏற்றுக் கொண்டதாக அமைகின்றது.

குழப்பம் நிறைந்த தீவில் இறுதியாக அமைதி பிறப்பதானால் அது கொழும்பில் உள்ள சிங்கள உயர் நிலையினரதும் யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ்ப் போராளிகளினதும் பாதிக்கப்பட்ட மனதிலிருந்து எழும் சிரிப்பின் ஒலிகளினால் தான் இயலும்.

இது இந்தியாவுக்கு ஒரு ராஜதந்திரத் தோல்வியாக அமையும். இத் தோல்வியினால் புதுடில்லி முழு அவமானம் அடையாமல் இருக்க வேண்டுமானால், சிந்தித்துச் செயலாற்றாத தன்மைக்காக ராஜீவ் காந்தி பெற்ற பாடங்களில் இருந்து, பாடம் படித்துக் கொள்ள இப்போதாவது முயற்சிக்க வேண்டும். ★

### தூங்கிய தமிழன் விழித்துக் கொண்டான்!

# 70 வருடச் சிறை என்றாலும் கூட புலிகளை ஆதரித்தே தீருவோம்!!

## பாட்டாளி கட்சித் தலைவர் ராமதாஸ் அறிவிப்பு

சென்னை, மே 28

"தூங்கிய தமிழன் இன்று விழித்துக் கொண்டு விட்டான். 7 வருடச்சிறை என்ன, 70 வருடச் சிறைத்தண்டனை என்றாலும் புலிகளை ஆதரிப்போம்; ஆதரித்தே தீருவோம்."

இப்படி முழங்கினார் பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் டாக்டர் ராமதாஸ்

சேலத்தில் நடந்த பகிரங்க கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இப்படித் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

"விடுதலைப் புலிகள் தமிழ் நாட்டில் சட்டம், ஒழுங்கை கெடுத்து விட்டார்கள். மிகப் பெரிய துரோகத்தை அவர்கள் தமிழகத்தில் செய்து விட்டார்கள் என்றெல்லாம் ஜெயலலிதா, வாழப்பாடி ஆகியோர் புலம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

பத்மநாபா கொலையை வைத்து சட்டம், ஒழுங்கு கெட்டு விட்டதாகக் கூறினார்கள். சட்டம் ஒழுங்கு கெட்டதென்றால் ஊரடங்கு போடப்பட்டு மக்கள் வெளியே வராத அளவுக்கு நிலை இருக்கும். அப்பொழுது தான் சட்டம், ஒழுங்கு கெட்டதாக இருக்கும். இப்போது அப்படி உள்ளதா? ஆனால் சட்டம், ஒழுங்கு கெடும் நிலை வரப்போகிறது.

ஜெயலலிதா எடுத்த முடிவில் [விடுதலைப் புலிகளுக்குத் தடை] விளைவு வேறுவிதமாக இருக்கும் என்று கூறி நான் இதை வன்மையாகக் கண்டிக்கிறேன். ஆனால் ஜெயலலிதா மத்திய அரசுக்கு நன்றி கூறுகிறார்.

நாங்கள் ஜெயலலிதாவுக்கு நன்றி சொல்கிறோம். ஏனென்றால் நாங்கள் தூங்கிக் கொண்டிருந்தோம். இப்போது உணர்வு வந்து விழித்துக் கொண்டோம். விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்ததன் மூலம் நாங்கள் விழித்துக் கொண்டோம்.

எமது மக்களுக்கு இன்னும் தமிழ் ஈழம், விடுதலைப் புலிகளின் போராட்டம், பிரபாகரன் பற்றி சரியாகச் சொல்லப்படவில்லை. விடுதலைப் புலிகளை ஆதரித்தால் இப்போதெல்லாம் 7 வருடம் சிறை என்கிறார்கள். 7 வருடம் என்ன, 70 வருடம் போட்டாலும் சரி, நான் போனால் என்ன? எனக்குப் பிறகு எனது மகன் வருவான். என் பேரன் வருவான். போராட அப்போது ஜெயலலிதா இங்கு இருக்கமாட்டார். நாட்டை விட்டே துரத்தி அடிக்கப்படுவார்.

தமிழர்களின் ஒட்டு மொத்த தமிழ் உணர்வைப் பழிவாங்க வேண்டும் என்றே ஜெயலலிதா முயல்கிறார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு எத்தனை தடை வந்தாலும் அவர்களை ஆதரிப்பதிலிருந்து மாறமாட்டோம். ஒட்டு மொத்த ஆதரவு அவர்களுக்கு எப்போதும் உண்டு. அதனால் வரும் விளைவைச் சந்திக்க நாம் தயார். லட்சக்கணக்கில் தமிழ் இளைஞர்கள் அதற்குத் தயாராக உள்ளனர்".

இவ்வாறு அவர் தெரிவித்தார். [ஓ-3]

### ஆயுதபாணிகள் பட்டப் பகலில்

# கொட்டாவ வங்கி கிளையில் 8 லட்சம் ரூபா கொள்ளை!

கொழும்பு, மே 28

கொழும்பு நகருக்கு வெளியே ஹோமாகம பகுதியில் உள்ள கொட்டாவவில் அமைந்துள்ள தனியார் வங்கி ஒன்றில் இருந்து சுமார் எட்டு லட்சம் ரூபா பணம் பட்டப் பகலில் ஆயுதம் தாங்கிய ஐந்து இளைஞர்களால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் "பிக்கப்" வாகனத்தில் வந்த இளைஞர் கோஷ்டி ஒன்று ஆயுத முனையில் வங்கி ஊழியர்களையும், அங்கு கூடியிருந்தவர்களையும் பயமுறுத்தி கொள்ளையடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

கொள்ளையர்கள் தாம் சென்ற "பிக்கப்" வாகனத்தை மாகும்பர என்னும் இடத்தில் கைவிட்டுச் சென்றுள்ளனர் என்றும் —

பொலீஸார் அந்த வாகனத்தைக் கைப்பற்றியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தனியார் வங்கியான செலான் வங்கியின் கிளையிலேயே இக் கொள்ளை இடம் பெற்றது. (ஓ-த)

### தமிழர்கள் கொலையுண்ட

# கருப்பொல கிராமத்துக்கு 'யுனிசெப்' குழுவினர் விஜயம்

கொழும்பு, மே 28

முஸ்லிம் ஊர்காவல் படையினரால் கடந்த மாதம் தமிழர்கள் பலர் கொலை செய்யப்பட்ட பொலன்னறுவ, கருப்பொல கிராமத்திற்கு ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (யுனிசெப்), அகதிகள் நிவாரண அமைப்பு [ஆர். ஆர். ஓ.] ஆகியவற்றின் உயர் அதிகாரிகள் கொண்ட குழு ஒன்று விஜயம் செய்தது.

அங்கு இடம்பெற்ற அனர்த்தங்களை குழுவினர் பார்வையிட்டனர்.

முஸ்லிம் கிராமமான அழிஞ்சிப் பொத்தானைக்கும் அவர்கள் விஜயம் செய்தனர். [ஓ]

### விசாரணைக்கு உத்தரவு

சென்னை, மே 28

குண்டு வெடிப்புச் சம்பவத்திற்கு இலக்கான கும்பகோணம் — சீனிவாச நல்லூர் "தூரதர்ஷன்" தொலைக் காட்சி அஞ்சல் நிலையப் பிரதேசத்தைச் சுற்றிப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் —

அச்சம்பவம் பற்றி விசாரணை ஒன்றுக்கு மத்திய அரசு உத்தரவிட்டுள்ளதாகவும் புதுடில்லி அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஓ-எ)

### சபை மீண்டும் 9 இல் கூடும்

கொழும்பு, மே 28

நாடாளுமன்றம் மீண்டும் அடுத்த மாதம் 9 ஆம் திகதி கூட இருக்கிறது. [ஓ-எ]

### மின் மாற்றி சேதமாக்கப்பட்டது

கொழும்பு, மே 28

அம்பாறை மாவட்டம் அன்னமலை ரயில் நிலையத்துக்கு அருகில் உள்ள மின் மாற்றி இனந்தெரியாதோரால் சேதப்படுத்தப்பட்டுள்ளது என்று கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் அறிவித்துள்ளது [ஓ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர் பட்டாளத்துடன் பிரேமா வவுனியா வருகிறார்!

வவுனியா, மே 28

வவுனியாவில் நடைபெற இருக்கும் ஜனாதிபதி இடம் பெயர் சேவையில் பங்குபற்று வதற்காக பிரதமர் டி. பி. விஜயதுங்க மற்றும் 26 அமைச் சர்கள் பட்டாளத்துடன் ஜனாதிபதி பிரேமதாஸா வவு னியா வருகிறார். அமைச்சுக் களின் அதிகாரிகள் பலரும் இங்கு வருகின்றனர்.

9 ஆவது இடம்பெயர் சேவைகள் நாளை 29 ஆம் திகதி தொடக்கம் மூன்று நாட்கள் தொடர்ச்சியாக நடைபெறவுள்ளன.

வவுனியா காமினி வித்தி யாலயத்திலும், தமிழ் மகா வித்தியாலயத்திலும் நடை பெறவிருக்கும் இடம்பெயர் சேவையை முன்னிட்டு அங்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடு கள் செய்யப்பட்டுள்ளன. [ஒ-5]

# "சுகநலம்" கூத்து இன்று அரங்கேற்றம்

யாழ்ப்பாணம் மே. 28

யாழ். மிட் - ரவுண் றோட் டறக்ட் கழகம் வழங்கும் "சுக நலம்" கூத்து நிகழ்ச்சி இன்று மாலை 5 மணிக்கு யாழ் சென் ஜோன்ஸ் கல்லூரி யுபிலி மண்டபத்தில் அரங்கேற்றப் படவிருக்கிறது.

பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக சமூக மருத்துவத்துறைத் தலைவர் பேராசிரியர் செ. சிவஞான சுந்தரம் [நந்தி] கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாநகர சபை ஆணை யாளர் திரு. வே. பொ. பால சிங்கம், யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை முதுநிலை விரி வுரையாளர் கலாநிதி இ. பாலசுந்தரம் ஆகியோர் பங்கு பற்றுவர்.

சுகாதார மேம்பாட்டு நிகழ்ச்சியான இக்கூத்து, யாழ். மாவட்டத்தில் உள்ள பல்வேறு கேந்திரப் பாட சாலைகளிலும் கிராமங்களி லும் எதிர்வரும் ஜூன் 12 ஆம் திகதி வரை தொடர்ந்து நடத்தப்படும் எனத் தெரிவிக் கப்படுகிறது.

மக்களிடையே சுகாதாரம் சம்பந்தமான அறிவை வளர்க் கும், முயற்சியாகவும்—

போர்க்கால சூழலில் ஏற் பட்டுள்ள பாதிப்புகளையும் அவற்றைத் தீர்க்கும் வழி களையும் இசைக் கூத்தின் மூலம் மக்களுக்கு எடுத்துக் காட்டும் முயற்சியாகவும் இக் கூத்து நிகழ்ச்சி ஏற்பாடு செய் யப்பட்டிருப்பதாகத் தெரிவிக் கப்பட்டது.

யாழ். மாநகர சபை சுகா தாரப் பிரிவினால் தயாரிக்கப் பட்ட இந்த இசைக்கூத்து நிகழ்ச்சியை யாழ். மிட் ரவுண் றோட்டறக்ட் கழகம் மேடையேற்றுவதற்கு பல் வேறு பொது நிறுவனங்கள், அமைப்புகள் ஆதரவு நல்கி யுள்ளன. [உ]


## மரண அறிவித்தல்கள்

### திருமதி பெரியதம்பி அன்னம்மா

கோப்பாய் தெற்கு இருபாலையைச் சேர்ந்த திருமதி பெரியதம்பி அன்னம்மா 27 - 5 - 92 இல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற பெரியதம்பி யின் அன்பு மனைவியும், சண்முகலிங்கம் [றோஸ் பிராண்ட் ரொபிக்] கம்பனி, பரமநாதன் ["ஜெட் மார்க்" கற்பூரம் கம்பனி] ஆகியோரின் தாயாரும், காலஞ் சென்ற தவமணிதேவி, திலகவதி, கமலாதேவி, ஆகியோரின் அன்பு மாமியும், ஸ்ரீதரன் [கனடா], பிரதீபன், லோஜிதா, காந்தீபன, குணசங்கரி, தணிகைறாபன், தணிகைவதனி, பார்த்திபன் ஆகி யோரின் அன்புப் பேத்தியும், சங்கரலிங்கத்தின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் வியாழக்கிழமை 28 - 5 - 92 நண்பகல் 12 மணியளவில் இருபாலை குடும்ப மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பெ. பரமநாதன்
(மகன்)

சந்திரன் வீதி. [குளுக்கண்டி
கோப்பாய் தெற்கு லேன்.]
கோப்பாய்.

[21165)

### நாகலிங்கம் சேனாதிராசா

[தியாகராசா]

யாழ்ப்பாணம் இராசாவின் தோட்ட வீதியைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி சைவப் பாடசாலை ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்டவரான சேனாதிராசா அவர்கள் காலமாகிவிட்டார். இவர் பாக்கியவதியின் அன்புக் கணவரும் வசந்தி [சுவிஸ்], உதயகுமார் [சுவிஸ்], சுகந்தி, சதீஸ்குமார் [சுவிஸ்], ஜெயந்தி, பிருந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவநாதன் [சுவிஸ்], பரமேஸ்வரன், கலாநிதி, ராகுலன் [சுவிஸ்] ஆகியோரின் மாமனாரும், உமாசங்கர் [சுவிஸ்], கௌதமி ஆகியோரின் அன்புப் பேரனும் காலம்சென்ற புண்ணியசிங்கம், மகேஸ்வரி, அரியமலர், ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலம்சென்றவர்களான சீனிவாச கம், இரத்தினசபாபதி மற்றும் நித்தியானந்தன் [யாழ். அஞ்சல் திணைக்களம்], அன்னசோதி, இரத்தினபூபதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக திருநெல்வேலி செம்பாடு மயானத்திற்கு இன்று காலை பத்து மணியளவில் எடுத்துச் செல்லப்படுமென்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறி யத்தருகின்றோம்.

தகவல்:
ச. நித்தியானந்தன்
[மைத்துனர்]

சைவப் பாடசாலை ஒழுங்கை,
திருநெல்வேலி.

[21164]


# தமிழர் பிரச்சினையை அடுத்தவர் பயன்படுத்தும் நிலை தொடருகிறது

## அதனைத் தொடர இடமளிக்கக் கூடாது

யாழ்ப்பாணம், மே 28

தமிழ்மக்களின் பிரச்சினை களை தமது நலன்களுக்கா கவே இந்தியாவும், இலங்கை யும், மேலை நாடுகளும் பயன் படுத்தி வந்துள்ளன. எடுப் பார் கைப்பிள்ளையாக தமிழ் இனம் ஏனையோரால் பயன் படுத்தப்பட்டு வந்துள்ளது. இந்நிலை தொடர இடம் கொடுக்காத வகையில் தமிழ் மக்கள் சிந்தித்துச் செயற்பட வேண்டிய காலகட்டம் இது வாகும்.

இப்படிக் கூறினார் திரு. மு. திருநாவுக்கரசு.

யாழ். பல்கலைக்கழக வர லாற்றுத்துறை மாணவன் சி. பிரபாகரனின் மூன்றா வது நினைவு விழாவில் பேசு கையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

யாழ். பல்கலைக் கழக மறு மலர்ச்சிக் கழக ஏற்பாட்டில் நடந்த இந்த நிகழ்ச்சியில் அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரையில் கடந்த 15 வருடங்களில் பல மாற் றங்கள் இடம் பெற்றுள்ளன.

ஜே ஆர். ஆட்சிக்,காலம் இந் தியப் படை வருகை, இந்தியப் படை - புலிகள் பேச்சு, தென் னிலங்கையில் ஜே. வி. பி கிளர்ச்சியின் உச்சகட்டம், பிரேமதாசா ஜனாதிபதியாக வந்தது போன்ற முக்கிய சம்பவங்கள் இடம்பெற்றுள் ளன. இந்தசம்பவங்களை நோக்கும் போது அவை எல் லாம் தமிழரின் இனப்பிரச் சினையுடன் தொடர்பு கொண்டவையாகும்.

ஜே ஆர். தாம் ஆட்சியில் நீடிக்கவும், ஸ்ரீமாவோவை ஆட்சிக்கு வராமல் தடுக்கவும் சுதந்திரக் கட்சியை வீழ்த் தவும் இனப்பிரச்சினை யையே ஆயுதமாகப் பயன் படுத்தினார்

இந்தியாவும் தனது நலன் களைப் பாதுகாக்கவும், தென் னிந்தியாவில் பிரிவினைக் கோஷம் எழாமல் தடுக்கவும் இனப்பிரச்சினையைப் பயன் படுத்தியது

சிறிய இனமாக - சோகங் களை தாங்கி வாழும் இன மாக - எம்மை வைத்து மற்ற வர்கள் தமது அரசியல் நோக் கங்களை நிறைவேற்றி வரு கின்றனர் — என்றார் அவர்.

பதினைந்து வருட கால அரசியல் மாற்றங்களின் போதும் இலங்கையிலும் இந் தியாவிலும் சர்வதேச அரங் கிலும் ஒவ்வொரு கட்டத் திலும் இனப் பிரச்சனை எவ் வாறு அடுத்தவர்களால் பயன் படுத்தப்பட்டது என்பதனை அவர் விரிவாக விளக்கினார்.

மறுமலர்ச்சிக் கழகத்தைச் சேர்ந்த திரு. கணேசலிங்கம், மாணவர் அவைத் தலைவர் திரு. சந்திரசேகரம் ஆகியோ ரும் உரையாற்றினர். [அ-3]

## நாளை

குருநகர், மே 28

குருநகர் சென். ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தின் முத் தமிழ் விழா நாளை வெள் ளிக் கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய அதிபர் திரு. அ. இரனிஸ்லோஸ் தலைமையில் ஆரம்பமாகும்.

பிரதம விருந்தினராக பேராசிரியர் கா. சிவத்தம்பி யும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். கோட்ட பிரதிக் கல் விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் விடுதலைப் புலி கள் பிரமுகர்கள் திரு. யோக ரட்னம் [யோகி] திரு. தேவர் செஞ்சோலைப் பொறுப்பா ளர் ஜனனி ஆகியோரும் கலந்து கொள்வர்.

[ஒ-51]

★ ★ ★

குருநகர், மே 28

மருதனார்மடம் கோட்டக் கல்வி அலுவலகத்தினால் நடத்தப்படும் வருடாந்த மெய்வல்லுநர் போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை காலை 8. மணிக்கும் மறு நாள் சனிக்கிழமை பிற்பகல் 1. 30 மணிக்கும் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத் தில் நடைபெறும்.

[ஒ-51-162]

## சீனச்சகடை...

[1 ஆம் பக்கத்தொடர்ச்சி]

தரையிறங்கினர்.

இச் சம்பவத்தைத் தொடர்ந்து, விமானப்படை யிடம் உள்ள சீனத் தயாரிப் பான வை - 12 ரக விமானங் கள் அனைத்தையும் நுணுக் கமாகச் சோதனை செய்யும் படி உத்தரவிடப்பட்டது. பூரண சோதனையின் பின் னரே வை - 12 ரக விமானங் கள் பறக்க அனுமதி வழங் கப்படும் என்று தெரிவிக்கப் படுகிறது.

நடுவானில் வைத்து சக்கரம் கழன்று விழுந்த சம்பவம் பற்றி அந்த ரக விமானங் களைத் தயாரித்துவரும் சீன ஹார்பின் விமானக் கூட்டுத் தாபனத்தின் கவனத்துக்கும் இது கொண்டுவரப்பட்டுள் ளது.

பாரிய சேதமின்றி அவ் விமானத்தைத் தரை இறக் கியதற்காக அந்த விமா னத்தை ஓட்டிய விமானி களை விமானப்படைத் தள பதி பாராட்டினார்.

[உ-எ]

## வற்றாப்பளை...

[2 ஆம் பக்கத் தொடர்ச்சி]

டுள்ளது

ஆலயத்தில் திரண்ட பக்தர் களுக்கு முதலுதவிச் சிகிச்சை செய்யச் சென்ற செஞ்சிலு வைச் சங்கத் தொண்டர்களில் இருவர் இறந்தது குறித்தும் ஒருவர் படுகாயம் அடைந்தது குறித்தும் அறிக்கையில் பிரஸ் தாபிக்கப்பட்டுள்ளது. [அ]

## தெரிவுக்குழு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

விலகிக் கொள்வது என்ற முடிவை அக்கட்சி இடை நிறுத்தி வைக்கக் கூடிய சூழ் நிலை இப்போது உருவாகி உள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

இதனிடையில் —

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் அடுத்த அமர்வு குறித்து இரு தினங்களில் தெரிவிப்பதாக குழுவின் தலை வர் மங்கள மூனசிங்கா சபா நாயகரிடம் தெரிவித்துள் ளார்.

சபாநாயகரைச் சந்தித்த சம யமே அவர் இப்படிக் கூறி னார். [ஒ-த-3]

## விநியோகிக்கப்படுகின்றது

கொழும்புத்துறை, மே 28

யாழ்ப்பாண உதவி அர சாங்க அதிபர் பிரிவுக்கு உட் பட்ட சகல கிராம சேவைஅலு வலர் பிரிவுகளிலும் தற்போது வறுமை நிவாரண உணவு முத்திரையும், குடும்ப அடை யாள அட்டைகளும் பொது மக்களுக்கு விநியோகிக்கப் பட்டு வருவதாக அறிவிக் கப்படுகிறது. (த-30)

## கண்டுபிடிப்பு

புதுடில்லி, மே 28

மீன் குடலைப் பதனிட்டு சத்திர சிகிச்சை நாராகப் பாவிக்கலாம் என இந்திய விஞ்ஞானிகள் கண்டுபிடித் துள்ளனர். [ஒ]

## வெளிநாட்டு...

[1 ஆம் பக்கத்தொடர்ச்சி]

மேலும் தெரிவிக்கப்பட்டிருக் கும் முக்கிய தகவல்கள் சில வருமாறு:-

★ 1991 இல் நாட்டின் மொத்தச் செலவில் 20 சத வீதம் இராணுவத்துக்காக செலவிடப்பட்டது. — அதா வது 16 ஆயிரத்து 700 கோடி ரூபா இராணுவத்துக்குச் செலவிடப்பட்டது.

★ 1990 இல் இலங்கை பெற்ற வெளிநாட்டு உதவி 23 ஆயி ரத்து 247 கோடி — அதில் 14 ஆயிரத்து 600 கோடி ரூபா — இராணுவத்துக்குச் செலவிடப்பட்டது.

★ 85 கோடி மக்களைக் கொண்ட இந்தியாவில் இரா ணுவத்தினர் எண்ணிக்கை 12 லட்சம் — ஆனால் ஒன்ற ரைக் கோடி மக்கள் வாழும் இலங்கையில் இராணுவத் தினரின் எண்ணிக்கை ஒரு லட்சம்!

★ அதிரடிப்படை, ஊர் காவல் படை, தொண்டர் படை என்பவற்றில் மேலும் 56 ஆயிரம் பேர் இருக்கிறார் கள்.

★ 1990, 1991 இல் கடற் படையினரின் எண்ணிக்கை மூன்று மடங்குகளாக அ கரித்தது.

★ கிழக்கு ஐரோப்பிய நாடு களிடமும், சீனாவிடமும் இலங்கை ஆயுதங்களையும், யுத்த தளபாடங்களையும் வாங்குகிறது. [அ-எ]


# ஷப்றா கிண்ணத்துக்காக

ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும்
மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் போட்டித்தொடர்

## இறுதியாட்டம்

## ஷப்றா அணி எதிர் ஜொனியன்ஸ் அணி

யாழ். இந்து மைதானத்தில் 31ஆம் திகதி (ஞாயிறு)

அனைவரும் வருக!


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 28 - 05 - 1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org